வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 06.05.2026 புதன்கிழமை | இதழ் : 120 | பக்கங்கள் : 08

## தமிழகத்தின் முதலமைச்சராக நாளை பதவியேற்கிறார் விஜய்!

### சென்னை நேரு விளையாட்டு அரங்கில் விழா

சென்னை, மே. 06

தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) தலைவர் விஜய், நாளை வியாழக்கிழமை தமிழக முதலமைச்சராகப் பதவியேற்கத் திட்டமிட்டுள்ளார்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இந்தப் பதவி யேற்பு விழா மிகப்பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதே தினத்தில் அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. 108 இடங்களைக் கைப்பற்றி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து, சட்டமன்றக் குழுத் தலைவராக விஜய் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மே 7ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பிரம்மாண்ட பதவி யேற்பு விழாவுக்கு, பல்வேறு மாநிலங்களின் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் கலந்துகொள்ள வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

07



## செம்மணி புதைகுழியில் நேற்றும் ஐந்து என்புக்கூடுகள் அடையாளம்


யாழ்ப்பாணம், மே. 06

செம்மணி மனித புதைகுழியில் இருந்து குழந்தை ஒன்றின் என்புக்கூட்டுடன் மேலுமொரு என்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், தங்க ஆபாரணம் எனச் சந்தேகிக்கப்படும் ஆபாரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 8ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

அதன்போது நேற்று 5 என்புக்கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டு தொகுதியில் குழந்தை ஒன்றின் என்புக்கூட்டு

07



## தமிழக வெற்றிக் கழகத்துக்கு 17 இலட்சம் வாக்குகளே அதிகம்



### வலிமையான எதிர்க்கட்சியாக போராடுவோம் என்கிறார் ஸ்டாலின்

சென்னை, மே. 06

கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி, நம்மை விட 17.43 இலட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு வீத வேறுபாடு என்பது 3.52 வீதம் மட்டுமே என தமிழக முன்னாள் முதல்வரும்

07

## நீதித்துறையின் செயற்பாடுகளிலும் தலையிட்டு வருகின்றார் ஜனாதிபதி!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 06

நாட்டின் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதியை நிலைநாட்டும் முறையை மீறி, நாட்டின் நீதித்துறையின் பிரதான ஊடகப் பேச்சாளராக ஜனாதிபதி மாறியுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது குறித்து நேற்று அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக சட்டவாக்கம்,

07



### தரமற்ற நிலக்கரி பயன்பாட்டால் ஏற்பட்ட

## மேலதிக நிதி இழப்புக்களை அரசு மின்நுகர்வோர் மீது சுமத்தவில்லை

கொழும்பு, மே. 06

நிலக்கரி இறக்குமதியின்போது ஏற்பட்ட முறைகேடுகள் மற்றும் தரமற்ற நிலக்கரி பயன்பாட்டினால் ஏற்பட்ட மேலதிக நிதி இழப்புகளை மின் நுகர்வோர் மீது சுமத்தப் போவதில்லை என அரசாங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, நிலக்கரி நெருக்கடி காரணமாக நுரைச்சோலை மின் நிலையத்தில் முழுமையான

07

## த.வெ.க. ஆட்சியமைக்க நான்கு வழிகளே உண்டு!

சென்னை, மே. 06

தமிழக சட்டசபை தேர்தலில் த.வெ.க. 108 இடங்களிலும், தி.மு.க. கூட்டணி 73 இடங்களிலும், அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. அதாவது, எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

ஆட்சியமைக்க 118 தொகுதிகள் வேண்டும். த.வெ.க. தலைவர் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய தொகுதிகளில் வெற்றி

07

## தாக்கப்பட்ட யாழ். மீனவர் நாமல் ராஜபக்ஷ கவலை

கொழும்பு, மே. 06

யாழ்ப்பாணம், பலாலியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் தாக்கப்பட்டு தற்போது இந்தியாவின் சென்னையில் சிகிச்சை பெற்று வரும் விவகாரம் குறித்து பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் கடுமையான கவலையை வெளியிட்டுள்ளார்.

கடலில் இருந்தபோது, தமிழகத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் குழுவினரால் தாக்கி அழைத்து செல்லப்பட்டதாகத்

07

## வடக்கு - கிழக்கில் மழை!

யாழ்ப்பாணம், மே. 06

எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நிலையில் மாதிரிகளின் அடிப்படையில் அடுத்த 48 மணித்தியாலத்தில் தென்மேற்கு வங்கக்கடலில் இலங்கைக்கு அண்மித்து காற்றழுத்த தாழ்வு பகுதி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 08 ஆம் திகதி

07

## அரச வைத்தியசாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ரஷ்யா அவதானம்

கொழும்பு, மே. 06

இலங்கையில் அரச வைத்தியசாலை கட்டமைப்பை நவீன உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்ப வசதிகளுடன் வலுப்படுத்துவது குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும் என ரஷ்ய சுகாதார அமைச்சர் மிஹைல் முராஷ்கோ தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்த ரஷ்ய சுகாதார அமைச்சர் மிஹைல் முராஷ்கோ தலை மையிலான தூதுக் குழுவினர், திங்கட்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கொழும்பு

07

## கோப்பாய் விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

### நேற்று முன்தினம் நள்ளிரவு சம்பவம்

யாழ்ப்பாணம் , மே. 06

கோப்பாயில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலக பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்கள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மதிலுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் புதிய அரசுடன் பேசுவதற்கு காத்திருக்கிறோம்!

## பாராளுமன்றத்தில் கூறினார் சாணக்கியன்

கொழும்பு, மே. 06

ஈழத் தமிழர் பிரச்னை தொடர்பில் தமிழ் நாட்டு அரசுடன் கலந்துரையாடுவதற்கு காத்திருக்கின்றோம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'தமிழக சட்டமன்றத் தேர்தலில் வரலாற்று சாதனை படைத்த தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தளபதி விஜய்க்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.


தமிழ்நாடு அரசோடும், தமிழக மக்களோடும் ஈழத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக வேலை செய்வதற்கு நாம் காத்திருக்கின்றோம்.' எனவும் சாணக்கியன் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

# விஜயை வாழ்த்தினார் நாமல்!

கொழும்பு, மே. 06

தமிழக தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது-


Namal Rajapaksa · 45m
Congratulations to Hon. C. Joseph Vijay on a resounding victory! The real work begins now, and I wish you and your team the strength and determination to overcome the challenges ahead and deliver meaningful benefits to the people.

I also hope for a stronger and more positive relationship with Sri Lanka on matters that impact the people of both nations. My very best wishes to you and your team, @ActorVijay. #TVK

சி. ஜோசப் விஜய்க்கு இந்த மகத்தான வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்! உண்மையான பணி இப்போதுதான் தொடங்குகிறது. வரவிருக்கும் சவால்களை வென்று, மக்களுக்கு அர்த்தமுள்ள நன்மைகளை வழங்குவதற்கான வலிமையும் உறுதியும் உங்களுக்கும் உங்கள் குழுவினருக்கும் கிடைக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

மேலும், இரு நாட்டு மக்களையும் பாதிக்கும் விடயங்களில் இலங்கையுடன் ஒரு வலுவான மற்றும் நேர்மறையான உறவு உருவாகும் என்றும் நான் நம்புகிறேன். உங்களுக்கும் உங்கள் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்-என்றுள்ளது. (அ)

# எக்னெலிகொட வழக்கு மீண்டும் விசாரணைக்கு!

கொழும்பு, மே. 06

சட்டமா அதிபர் தாக்கல் செய்த முறைப்படியான குற்றப் பத்திரிகையைத் தொடர்ந்து, பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்குதல் தொடர்பான, நீண்ட காலமாக முடங்கிக் கிடந்த விசாரணையை மீண்டும் தொடங்க கொழும்பு மேல் நீதிமன்றத்தின் அமர்வு முடிவு செய்துள்ளது.

இந்த வழக்கு முன்னதாக, நீதிபதிகளான நமல் பாலல்லே, மகேன் வீரமான் மற்றும் சுஜீவ நிஸங்க ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வின் முன்பு விசாரிக்கப் பட்டது.

எனினும், ஒழுங்கு நடவடிக்கை விசாரணை நிலுவையில் இருந்ததால் நீதிபதி நமல் பாலல்லே இடைநீக்கம் செய்யப்பட்டதாலும், நீதிபதி மகேன் வீரமான் ஓய்வு பெற்றதாலும், அந்த விசாரணை பல மாதங்களாகத் தடைபட்டிருந்தது.

அதன் விளைவாக, பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, இந்த நடவடிக்கைகளை விசாரிப்பதற்காக மூன்று நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வை நியமித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீதிபதிகள் நயன செனவிரத்ன, நலின் ஹெவாவசம் மற்றும் லக்மாலி ஹெவாவசம் ஆகியோரைக் கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட அமர்வின் முன்பாக, இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறிப்பாக, இவ்வழக்கு முன்னர் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் நடவடிக்கைகள், முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தனது பதவிக் காலத்தில் பயன்படுத்திவந்த கொழும்பு, விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நிறுவப்பட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றன.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி அமர்வு, மே 8 முதல் வாரந்தோறும் விசாரணை நடைபெற வேண்டும் என உத்தரவிட்டது.

மேலும், இரண்டு சாட்சிகளுக்கு அடுத்த விசாரணைத் திகதியில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது.

2010 ஜனவரி 24 முதல் 27 வரை பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக, முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். (அ)

# 37 சீனர்கள் நாடு கடத்தல்!

கொழும்பு, மே. 06

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு, வெலிசறை தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பெண்கள் உட்பட 37 சீன நாட்டவர்கள் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அந்தக் குழுவினர், குடிவரவு மற்றும் குடியகல்வு விதிமுறைகளை மீறி, நாட்டில் சட்டவிரோதமாக வசித்து வந்ததாகவும், பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்தக் குழுவுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, சீனாவைச் சேர்ந்த 11 பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட குழுவும் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்திருந்தது.

நாடு கடத்தப்பட்டவர்கள் நேற்று முன் தினம் இரவு 10:50 மணிக்கு, சீனாவின் குன்மிங் நோக்கிச் சென்ற சைனா ஈஸ்டர்ன் ஏயார்லைன்ஸ் விமானம் மூலம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். (அ)

# களுத்துறையில் மகளை கொன்ற தந்தை கைது!

கொழும்பு, மே. 06

களுத்துறை வடக்குப் பகுதியில் நீண்ட காலமாக நிலவி வந்த நிலத்தகராறு காரணமாக, தனது 35 வயது மகளைக் கொலை செய்தார் எனக் கூறப்படும் 63 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போசிறிபுர பகுதியில் மே 4 ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்ததாகவும், அதில் குறித்த பெண் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டதில் படுகாயம் அடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் நாகொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நில உரிமை தொடர்பாக நிலவி வந்த தகராறு முற்றியதைத் தொடர்ந்து, சந்தேக நபரான அவரது தந்தை இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தற்போது கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் உள்ளார். (அ)

# தரம் 6 கல்வி சீர்திருத்தங்கள் 2027 ஜனவரியில் நடைமுறை!

## பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, மே. 06

தரம் 6 கல்வி சீர்திருத்தங்கள் 2027 ஜனவரி மாதத்தில் செயல்படுத்தப்படும் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டார்.

முன்னர் அச்சிடப்பட்ட பாடத்திட்டங்களில் உள்ள குறைபாடுகளை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு, தனது ஆய்வை முடித்து, திருத்தங்களைப் பரிந்துரைத்து, கலந்துரையாடல்களை இறுதி செய்துள்ளது.

திருத்தப்பட்ட பாடத் தொகுப்புகள் இந்த மாதம் அச்சிடுவதற்கு அனுப்பப்படும்.



புதிய சீர்திருத்தங்களின் கீழ் ஆசிரியர் பயிற்சி ஜூன் மாதத்தில் தொடங்கும், அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்கள் குறித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கான விளக்கக் கூட்டங்கள் ஜூலை மாதம் தொடங்கும் என்றும் அவர் கூறினார். (அ)

# ஜூலை 1 இற்குள் முன்பள்ளிகளை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்



கொழும்பு, மே. 06

நாட்டின் அனைத்து முன்பள்ளிகளும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்பு பதிவு செய்யப்படவேண்டும் என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இனி வரும் காலத்தில் முன்பள்ளியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்பு அதனைப் பதிவு செய்வது கட்டாயமாகும்.

முன்பள்ளி கல்விக்கான வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# சிறைச்சாலையில் கைதி மரணம் மூன்று சிறைக்காவலர்கள் கைது!

கொழும்பு, மே. 06

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த கைதி ஒருவர் திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், மூன்று சிறைக்காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்தார்.

உயிரிழந்த கைதி கடந்த 3ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையின் துப்புரவுப் பணிகளின்போது தப்பிச் சென்றிருந்ததுடன், அதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் குறித்த கைதி திடீரென நோய்வாய்ப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எவ்வாறாயினும், சிறைச்சாலை அதிகாரிகள் அவரைத் தாக்கியுள்ளதாக உயிரிழந்த கைதியின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதற்கமைய, இச்சம்பவம் தொடர்பில் வெலிக்கடை சிறைச்சாலையின் மூன்று சிறைக்காவலர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
06.05.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## "கம்பன் புகழ் விருது" பெற்ற ஜனாதிபதியின் கவனத்துக்கு...!

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழாவின் இறுதிநாள் நிகழ்வில் "கம்பன் புகழ் விருது" கௌரவம் பெற்ற ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க "இலங்கையில் இனவாதத்தை முறியடித்து நல்லிணக்கத்தை முழுவதுமாக ஏற்படுத்துவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாதை மிகவும் நீண்டது. ஆனால், நாங்கள் அதை முன்னெடுப்பதில் சளைக்கமாட்டோம். அதை அடைந்தே தீருவோம்" என்று சூளுரைத்தார்.

இலங்கையில் மற்றைய எந்த குடிமகனுக்கு எந்த விதத்திலும் குறைவானவன் அல்லன் என்று நிலைப்பாடு தனக்கும் தனது மக்களுக்கும் உறுதிப்படுத்தப்படும்போது மாத்திரமே இலங்கையின் குடிமகன் என்பது குறித்து பெருமைப்பட முடியும் என்று காலஞ்சென்ற தமிழ் அரசியல் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் ஒரு தடவை தன்னிடம் கூறியதை நினைவுபடுத்திய ஜனாதிபதி நாட்டின் சகல குடிமக்களும் சமத்துவமானவர்கள் என்ற நிலையை நிச்சயம் ஏற்படுத்துவோம் என்றும் கூடினார்.

கம்பன் விழாவில் கௌரவிக்கப்பட்ட குதூகலத்தில் தமிழர்கள் மத்தியில் பேசிய வேளையில் தான் வழங்கிய உறுதி மொழியை கூறுவது சுலபம், நடை முறையில் சாதிப்பது பெரும் கஷ்டம் என்பதை ஜனாதிபதி நன்றாக அறிவார். அத்துடன் இலங்கையில் இனவாதமும் மதத் தீவிரவாதமும் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் சகல சமூகங்க ளையும் சமத்துவமாக நடத்துவதே தங்களது கொள்கை என்றும் ஜனாதிபதியும் ஏனைய அரசாங்கத் தலைவர்களும் அடிக்கடி கூறிவருவதையும் நாம் அறிவோம்.

நல்லிணக்கத்துக்கான பாதை மிகவும் நீண்டது என்று கூறியிருக்கும் ஜனாதிபதியிடம் "அந்த நீண்ட பாதையிலான பயணத்தில் இதுவரையில் அவரது அரசாங்கம் பொதுவில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய சிறியதொரு அடியையாவது எடுத்து வைத்திருக்கிறதா?" என்ற கேள்வியைக் கேட்க ஈழநாடு விரும்புகிறது.

சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவது என்பதையும் இனவாத்தை மீண்டும் தலையெடுக்க அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் கூறும் போது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்கு இல்லாத பல பிரச்சினைகள் சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக, உள்நாட்டுப் போரில் சொல்லொணா அழிவுகளைச் சந்தித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு இருக்கிறது.


அந்த பிரத்தியேகமான பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றுக்கு போர் முடிவுக்குவந்து 17 வருடங்கள் கடந்து விடப்போகின்ற நிலையிலும் தீர்வுகள் காணப்படவில்லை. அந்த பிரச்சினைகளைப் பொறுத்தவரை, முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அணுகுமுறைக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அணுகுமுறைக்கும் இடையில் பெரிதாக வேறுபாடு இல்லாத போது "சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவது "என்ற சுலோகம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை உணர்வை ஏற்படுத்த உதவப் போவதில்லை என்பதை" வரலாற்றை மாற்றிய ஆண்மையாளன்" என்று கம்பன் கழகத்தவர்கள் போற்றும் ஜனாதிபதி திசநாயக்க விளங்கிக் கொள்ள வேண்டும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலான உறுதிப்பாட்டை ஜனாதிபதி தமிழர்கள் மத்தியில் அல்ல, பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியிலேயே உரத்துப் பேச வேண்டும். அரசியலமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளைக் கூட நடைமுறைப்படுத்த அனுமதிக்காத " சட்டவிரோதமான அரசியல் கலாசாரம் " ஒன்று தென்னிலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. அதை மாற்றியமைக்கக்கூடியதாக பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் மத்தியில் புதிய அரசியல் சிந்தனையை. ஏற்படுத்துவதற்கு "புதிய அரசியல் கலாசாரம்" பற்றி பேசும் அரசாங்கம் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பில் தென்னிலங்கை கடும்போக்கு தேசியவாதிகளைப் பகைத்துக்கொள்ளாத அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கும் வரை ஜனாதிபதி கூறுகின்ற "நல்லிணக்கத்துக்கான நீண்டபாதை" யில் ஒரு அங்குலம் கூட முன்னேற முடியாது என்பதை அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் கூறிவைக்க ஈழநாடு விரும்புகிறது.

## எமது மக்களின் அரசியல் தீர்வுப் பயணத்தில் உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்!

### விஜய்க்கு அனுப்பிய வாழ்த்து செய்தியில் சிறீதரன்



கிளிநொச்சி, மே. 06

"தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, மிகப்பெரிய சரித்திர வெற்றியைப் பதிவு செய்து, முதலமைச்சராகத் தெரிவாகியிருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர், அன்புச் சகோதரர் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தொப்புள்கொடி உறவுகளான எமது மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக்கான பயணத்திலும், சர்வதேச அரங்கில் எமக்கான நீதியைப் பெற்றுத்தரும் முயற்சியிலும், உங்களது தலைமையிலான தமிழ்நாடு அரசு முன்னின்று ஒத்துழைப்பு வழங்கும் என ஈழத் தமிழர்களாகிய நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்-

புதுமுக அரசியல் கட்சியாகப் புரட்சிகர அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து, பல்வேறு நெருக்கடிகளையும் சோதனைகளையும் கடந்து, தமிழக மக்களின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்றுள்ளீர்கள். மக்கள் உங்களுக்கு வழங்கியுள்ள இந்த ஆணையை, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்கும் பயன்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

குறிப்பாக, ஈழத்தமிழர்களாகிய எமது வாழ்வுரிமை மற்றும் அரசியல் அபிலாசைகள் குறித்த உங்களது தெளிவான நிலைப்பாட்டை நாம் கூர்ந்து கவனித்து வருகிறோம். தங்களின் புரட்சிகரமான புதிய பயணம் வெற்றியளிக்க இறைவனை வேண்டுகிறேன் - என்றுள்ளது. (அ)

## ஈழத் தமிழ் மக்களுக்கு தமிழகத்தின் ஆதரவு தொடர்ந்து இருக்கவேண்டும்

### சுமந்திரனும் விஜய்க்கு வாழ்த்து



கொழும்பு, மே. 06

தமிழக தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு வாழ்த்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது-

தமிழ் நாட்டு சட்டசபைக்கான தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகத்திற்கும் அதன் தலைவர் விஜய்க்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களதும் அரசினதும் ஆதரவு தொடர்ந்து இருக்கவேண்டும் என்று உரிமையோடு எதிர்பார்க்கிறோம்-எனப் பதிவிட்டுள்ளார். (அ)

## மின்சார சபை முன்னாள் ஊழியர்களுக்கான இழப்பீட்டின் முதலாம் கட்டம் மே 15 இற்குள்!

கொழும்பு, மே. 06

இலங்கை மின்சார சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தன்னார்வ ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்த அதன் ஊழியர்களுக்கான இழப்பீடு இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்தார்.

இதன் முதல் கட்டத்தின் கீழ் மொத்த இழப்பீட்டில் 50 வீதம் திறைசேரி நிதியிலிருந்து வழங்கப்படும் என்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் கூறினார்.

சம்பந்தப்பட்ட ஆவணம் அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வரும் வாரத்திற்குள் அதற்கு ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, இழப்பீட்டுத் தொகையின் முதல் 50 சதவீதம் சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு மே 15ஆம் திகதிக்குள் வழங்கப்படும்.

மீதமுள்ள 50 சதவீதம் அதனைத் தொடர்ந்து குறுகிய காலத்திற்குள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

## தேர்தல் சட்டங்களை மறு ஆய்வு செய்ய பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமனம்

கொழும்பு, மே. 06

மாகாண சபைத் தேர்தல்கள் அல்லாத பிற தேர்தல் சட்டங்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 12 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இது தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் தவிர்ந்த பிற தேர்தல் சட்டங்களை முழுமையாக ஆய்வு செய்தல், அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தல், மற்றும் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பை அதிக வெளிப்படைத்தன்மையுடன் தயார் செய்வதற்கான அவசியமான முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல் ஆகியவை இந்த தெரிவுக் குழுவிற்கு வழங்கப்பட்ட முக்கியப் பொறுப்புகளாகும்.

பேராசிரியர் ஏ. எச். எம். எச். அபயரத்ன இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் ஏனைய உறுப்பினர்களாக கலாநிதி உபாலி பன்னிலகே, முனீர் முளப்பர், சட்டத்தரணி சுனில் வட்டகல, ரவி கருணாநாயக்க, ஜே.சி. அலவத்துவல, ஹர்ஷன ராஜகருணா, கதிரவேல் சண்முகம், ருவன் திலக ஜயக்கொடி, சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க, மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், சந்திம ஹெட்டியாரச்சி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**இடபம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல் நலம் சீராகும். இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக்கொடுத்துப் போக வேண்டிய நாள்.


**தனுசு**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**கும்பம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னிக்கு 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதி உதவி



வடமராட்சி, மே. 06

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னிப் பகுதிகளில் 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, திருநகர் வடக்கு பகுதியில் அமைந்துள்ள 10 மாணவர்கள் கல்வி கற்கும் சுரபி முன்பள்ளியின் கோரிக்கைக்கு அமைவாக, 25 ஆயிரம் ரூபா நிதி கற்றல், கற்பித்தல் உபகரணங்களுக்காக நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள குரு கணினி மையத்தின் கோரிக்கைக்கு அமைவாக, போலியோ நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றின் சுய தொழிலாக மேற்கொள்ளும் கணினி மையத்தின் நிழற்பிரதி இயந்திரம் திருத்துவதற்காக 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.


முல்லைத்தீவு- ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் பகுதியில் அமைந்துள்ள ஐயன்கன்குளம் பிள்ளையார் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஆலயக் கட்டுமானப் பணிக்காக நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு- மாமடு, நெடுங்கேணி கற்பகா அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை துணிகள் வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

(அ-02)

# பாரவூர்தியில் முதிரைமரக்குற்றிகளை ஏற்றிச்சென்றவர் பொலிஸாரால் கைது



யாழ்ப்பாணம், மே. 06

அனுமதிப்பத்திரமின்றி முல்லைத்தீவில் இருந்து யாழ்பாணம் நோக்கி பாரவூர்தியில் முதிரைமரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய மீசாலை பகுதியில் வைத்து குறித்த பாரவூர்தி மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது குறித்த பாரவூர்தியின் சாரதி 10 இலட்சம் ரூபா பெறுமதியான 43 முதிரை மரக் குற்றிகளுடன் பாரவூர்தியை கைவிட்டு தப்பிச்செல்ல முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

பாரவூர்தியை கைப்பற்றிய பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# காட்டு யானைகள் அட்டகாசம் பயந்தரு தென்னைகள் சேதம்

வவுனியா, மே. 06

வவுனியா செட்டிகுளம், வீரபுரம் மற்றும் முகத்தான்குளம் 2ம் பன்னை ஆகிய கிராமங்களுக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த தென்னைகளை சேதமாக்கிச் சென்றுள்ளன.

நேற்று முன் தினம் இரவும் குறித்த கிராமத்தினுள் உட்புகுந்த யானைகள் காய்க்கும் நிலையில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட தென்னைளையும் பயன்தரும் மரங்களையும் நாசமாக்கிச் சென்றுள்ளன.

குறித்த கிராமத்தில் யானைகளின் தொல்லைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் நிலையில் கிராம மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது கிராமத்தைச் சூழ யானை வேலியை அமைத்து தருமாறு கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், மே. 06

அமரர் தந்தை செல்வா நினைவு தினத்தை முன்னிட்டு தந்தை செல்வா நற்பணிமன்ற அனுசரணையுடன் யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக் கழக அலுவலகத்தில் அங்கத்த வர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தந்தை செல்வா நற்பணி மன்ற செயலாளர் எஸ்.கே. தளையரட ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கழக தலைவர் பி.ஏ. சி.குணேந்திரன், செயலா ளர் செல்வி இ.சுகிர்தா, பொருளாளர் திருமதி ந. சுதர்சினி உள் ளிட்டோர் பங்கேற்று அங்கத்தவர்களுக்கு மூக்கு கண்ணாடி களை வழங்கினர். (அ)

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!

அம்பாறை, மே. 06

பொத்துவில், லாகுகலை பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லாகுகலை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வயலில் உள்ள மரமொன்றின் மீது அமைக்கப் பட்டிருந்த வாடியில் இருந்த போதே இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பு குறித்து ஜனாதிபதி அநுர கருத்து!

## உடனடியாக விசாரிக்க கோருகிறது சுயாதீன சட்டத்தரணிகள் அமைப்பு

கொழும்பு, மே. 06

நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பு குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக, உடனடி விசாரணைகளை முன்னெடுக்குமாறு "சுயாதீன சட்டத்தரணிகள் அமைப்பு" பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மஹரகமவில் நடைபெற்ற மே தினப் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி, கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு வழக்கின் தீர்ப்பு மே மாதம் 25 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும், அந்தத் தீர்ப்பைக் கொண்டாட மக்கள் தயாராக இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

முன்கூட்டியே இத்தகைய அறிவிப்பை வெளியிடுவதானது நீதித்துறையின் சுதந்திரத்திற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியுள்ள "சுயாதீன சட்டத்தரணிகள் அமைப்பின்" பிரதிநிதி ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன், முழு நீதிமன்றச் செயல்பாடும் அரசியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதா என்பது குறித்துப் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன விசாரணை நடத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

பொது நிதிகள் தொடர்பான பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளைத் திசைதிருப்புவதற்காகவே இத்தகைய கருத்துகள் வெளியிடப்படுவதாகச் சட்டத்தரணிகள் தரப்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. விஸா கொள்கையினால் இலங்கை மாணவர்கள் பாதிப்பு!

கொழும்பு, மே. 06

அவுஸ்திரேலியாவின் கடுமையாக்கப்பட்ட மாணவர் விஸா கொள்கைகளால் இலங்கை மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயர்கல்வி விஸாக்களுக்கான நிராகரிப்பு விகிதங்கள் கடுமையாக அதிகரித்துள்ளதாக புதிய தரவுகள் காட்டுகின்றன.

அவுஸ்திரேலியாவின் உள்விவகாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களின்படி, 2026 பெப்ரவரியில் இலங்கையிலிருந்து வந்த மாணவர் விஸா விண்ணப்பங்களில் 38% நிராகரிக்கப்பட்டன.

இதன்மூலம், அதிக நிராகரிப்பு விகிதங்களைக் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

நேபாளம் 65 வீதம் என்ற அதிகபட்ச விஸா மறுப்பு விகிதத்தைப் பதிவு செய்தது. அதைத் தொடர்ந்து பங்களாதேஷ் 51 வீதம், இந்தியா 40 வீதம் என கொண்டிருந்தன, அதே நேரத்தில் பூட்டான் 36 வீதமாக இருந்தது.

விஸா முறைகேடு மற்றும் வீட்டுவசதி, உள்கட்டமைப்பு மீதான அழுத்தம் குறித்த கவலைகளுக்கு மத்தியில், குறிப்பாக சர்வதேச மாணவர் சேர்க்கையை இலக்காகக் கொண்டு, அவுஸ்திரேலியாவின் குடியேற்றக் கொள்கைகள் பரவலாகக் கடுமையாக்கப்படுவதை இந்தத் தரவுகள் பிரதிபலிக்கின்றன.

உயர்கல்வி விஸாக்களுக்கான ஒட்டுமொத்த நிராகரிப்பு விகிதம் 30 வீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளதாகவும், இது கடந்த இருபது ஆண்டுகளில் அவுஸ்திரேலியாவில் இல்லாத மிக உயர்ந்த அளவுகளில் ஒன்றாகும் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியா தனது குடிவரவு முறையைத் தொடர்ந்து மறுசீரமைத்து வரும் நிலையில், வரும் மாதங்களில் மாணவர் விஸா கொள்கைகளில் மேலும் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுவதால், இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கு அவுஸ்திரேலியா நீண்ட காலமாகவே விருப்பமான இடமாக இருந்து வருகிறது.

(அ)

# ஹக்கீம் தாக்கல் செய்த மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்றம்!

கொழும்பு, மே. 06

பாராளுமன்றத்தில் தங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாக அன்றி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களாக அங்கீகரிக்கக் கோரி ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர் ஆகியோர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் அசல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று முன் தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன, இந்த மனு உரிய காலப்பகுதியில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரை இதில் ஒரு பிரதிவாதியாகப் பெயரிடாதது சட்ட ரீதியான குறைபாடு எனவும் சுட்டிக் காட்டி ஆரம்பகட்ட ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே குறித்த உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் என பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளதால், மனுவை மீளப்பெற அனுமதிக்குமாறு கோரினார்.

எனினும், ஒரு கூட்டணியின் கீழ் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர், எவ்வாறு தனித்தரப்பாக பிரிந்து செயற்பட முடியும் என இதன்போது பிரதம நீதியரசர் கேள்வி எழுப்பினார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த உயர் நீதிமன்றம், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (அ)

# வட்ஸ்அப் சமூக வலைத்தளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் பாரிய நிதி மோசடி!

## கணினி அவசர பதில் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே. 06

வட்ஸ்அப் சமூக வலைத்தளம் ஊடாக முன்னெடுக்கப்படும் பாரிய நிதி மோசடி ஒன்று குறித்து இலங்கை கணினி அவசரப் பதில் பிரிவான "சேர்ட்" நிறுவனம் பொதுமக்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து இயக்கப்படும் இந்த மோசடி கும்பல், குறிப்பாக வீடியோ அழைப்புகள் மூலம் பொதுமக்களை வலையில் வீழ்த்துவதாகத் தெரியவந்துள்ளது.

முதலில் போலியான முகநூல் கணக்குகள் மூலம் தனிநபர்களின் விவரங்களைத் திரட்டும் இந்த மோசடி கும்பல், பின்னர் பாதிக்கப்பட்டவர்களின் நண்பர்கள் பட்டியலை அணுகுகின்றது.

அதனைத் தொடர்ந்து, குறித்த நபரின் வட்ஸ்அப் இலக்கத்திற்கு வீடியோ அழைப்பினை மேற்கொள்ளும்போது, அதில் தோன்றும் பெண்கள் ஆபாசமான முறையில் நடந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களையும் அவ்வாறே செய்யத் தூண்டுகின்றனர்.

இந்தச் செயல்பாடுகளை இரகசியமாகப் பதிவு செய்யும் மோசடிக்காரர்கள், பின்னர் அந்த வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் உள்ள உங்களது நண்பர்களுக்கு அனுப்பிவிடுவோம் என மிரட்டிப் பணம் பறிக்கின்றனர்.

இலங்கையிலிருந்து பல முறைப்பாடுகள் இது தொடர்பாகக் கிடைத்துள்ள நிலையில், மிரட்டலுக்குப் பயந்து இந்திய வங்கிக் கணக்குகளில் பணத்தைச் செலுத்தவேண்டாம் என அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவ்வாறான மோசடிகளுக்கு உள்ளாகும் நபர்கள் உடனடியாகத் தமக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யுமாறு இலங்கை கணினி அவசர பதில் பிரிவு வலியுறுத்தியுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொங்கு சட்டப்பேரவை அமைந்தால் தமிழகத்தில் யார் ஆட்சி அமைப்பர்?

## கூட்டணிக்கான பேச்சுக்களும் மும்முரம்

சென்னை, மே. 06

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், தொங்கு சட்டப்பேரவை அமையும் சூழல் உருவாகியுள்ளது.

தற்போது நடந்து முடிந்துள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக அதிக இடங்களில் வென்றுள்ள கட்சி என்ற முறையில், அந்தக் கட்சிக்கே ஆளுநர் அழைப்பு விடுப்பார் என்று அரசியல் அறிவியல் பேராசிரியர்கள் கூறுகின்றனர்.

ஆனால் த.வெ.க. எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்க வில்லை என்ற நிலையில், தி.மு.க. அல்லது அ.தி.மு.க கூட்டணிகளை சேர்ந்த கட்சிகள் ஆதரவு அளிக்குமா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளின்படி, த.வெ.க. அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அக்கட்சி மொத்தம் 108 தொகுதிகளில் வெற்றி



பெற்றுள்ள நிலையில், ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 118 இடங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இதனால் தமிழகத்தில் தொங்கு சட்டப்பேரவை அமையுமென்ற நிலை உருவாகியுள்ளது.

பெரும்பான்மை அரசை அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச இடங்களை எந்தவொரு அரசியல் கட்சியும், தேர்தலுக்கு முந்தைய கூட்டணியும் பெறாதபட்சத்தில் ஏற்படுவது தொங்கு சட்டப்பேரவை எனப்படுகிறது.

தமிழக சட்டப்பேரவையில் 234 தொகுதிகள் உள்ள நிலையில், தனிப்பெரும்பான்மைக்கு 118 இடங்களில் வெற்றி பெற வேண்டும். இந்தத் தேர்தலில் எந்தத் தனிக்கட்சிக்கும், கூட்டணிக்கும் இந்த அளவுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

இது குறித்து பேசிய மூத்த பத்திரிக்கையாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன், "த.வெ.க. ஆட்சி அமைப்பதில் பெரிய பிரச்னை எழ வாய்ப்பில்லை. ஏற்கெனவே காங்கிரஸுக்கும், த.வெ.கவுக்கும் இடையில் ஒர் இணக்கம் உள்ளது. அதனால் அவர்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அப்படி மாறுமென்று நான் நினைக்க வில்லை. அதேபோன்று தி.மு.க. கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் ஜெயிக்காத வேறு சில கட்சிகளும் கூட ஆதரவு தெரிவிக்கலாம். அ.தி.மு.க கூட்டணியில் உள்ள பா.ம.கவும் ஆதரிக்கலாம். அதன் காரணமாக த.வெ.க. நிச்சயமாக ஆட்சி அமைத்துவிடும் என்றே நம்புகிறேன். இப்போதே அதற்கான வேலைகள் தொங்கியிருக் கும்." -என்றார். (அ)

# முதலமைச்சர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார் ஸ்டாலின்

சென்னை, மே. 06

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் முதலமைச்சர் பதவியை நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

தேர்தலில் த.வெ.க. கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில், ஆளும் தி.மு.க. அரசின் கூட்டணி 73 இடங்களை தன்வசப்படுத்தியது.

முதலமைச்சர் ஸ்டாலின் உட்பட தி.மு.கவின் முக்கிய தலைவர்கள் பலரும் தோல்வியடைந்த நிலையில், மு.க. ஸ்டாலின் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஆளுநர் மாளிகைக்கு தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# எதிர்க்கட்சி தலைவராக உதயநிதி?



சென்னை, மே. 06

2026 சட்டமன்ற தேர்தல் முடிவுகள் தொடர்பில் கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தலைமை நேற்று ஆலோசனை நடத்தியுள்ளது.

இத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. தி.மு.க. கூட்டணி 73 இடங்களைப் பிடித்து ஆட்சியை இழந்துள்ளது.

விஜய் ஆட்சியமைத்தால் எதிர்க்கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் செயல்படுவார் எனக் கூறப்படும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் போன்ற கட்சிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர் எனக் கூறப்படுகிறது. (அ)

# தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் 32 அமைச்சர்களில் 16 பேர் தோல்வி

சென்னை, மே. 06

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட 32 அமைச்சர்கள் போட்டியிட்ட நிலையில், அதில் 16 அமைச்சர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

தோல்வியடைந்த அமைச்சர்களின் விவரம் பின்வருமாறு :

மு.க. ஸ்டாலின் - கொளத்தூர்
துரைமுருகன் - காட்பாடி
பி.டி.ஆர். தியாகராஜன்- மதுரை மத்தி
கீதா ஜீவன் - தூத்துக்குடி
அனிதா ராதாகிருஷ்ணன் - திருச்செந்தூர்
மூர்த்தி - மதுரை கிழக்கு
ஆர். காந்தி - ராணிப்பேட்டை
மா. சுப்ரமணியன் - சைதாபேட்டை
ராஜேந்திரன் - சேலம் வடக்கு
நாசர் - ஆவடி
மகேஷ் - திருவெறும்பூர்
மதிவேந்தன் - ராசிபுரம்
டி.ஆர்.பி. ராஜா - மன்னார்குடி
முத்துசாமி - ஈரோடு மேற்கு
அன்பரசன் - ஆலந்தூர்
சாமிநாதன் - கங்கேயம்

இந்த தேர்தல் முடிவுகள் தமிழக அரசியல் நிலவரத்தில் முக்கிய மாற்றத்தை சுட்டிக்காட்டுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# மக்கள் வழங்கிய தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம்

## மு.க.ஸ்டாலின் அறிக்கை

சென்னை, மே. 06

நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்பதாகவும், தி.மு.க. இனி சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்றும் அந்த கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணியை ஆதரித்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான நலத்திட்டங்கள் செயல்



படுத்தப்பட்டதாகவும், தங்களது சாதனைகளை முன்வைத்தே வாக்குகள் கேட்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாகக் கருதும் கொள்கை கொண்டவன் என்றும், தி.மு.க.வின் அரசியல் பயணம் தொய்வில்லாமல் தொடரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# தமிழக அரசியலில் ரஜினி, கமலினால் முடியாததை விஜய் சாதித்தது எப்படி?

சென்னை, மே. 06

"திரைவாழ்க்கையின் உச்சத்தை விட்டு அரசியலுக்கு வந்திருக்கிறேன்" அரசியல் மேடைகளில் இந்த வார்த்தையை விஜய் அடிக்கடி உச்சரித்தார். இதுவே அவரது ரசிகர்கள் மற்றும் கட்சியினரின் பிரசாரத்துக்கும், மறுபுறம் எதிர்க்கட்சியினரின் எதிர்வினைக்கும் வழிவகுத்தது.

விஜய் போன்றே திரையுலகத்தில் புகழின் உச்சத்தை எட்டிய பல நடிகர்களுக்கும் அரசியல் ஆசை இருந்திருக்கலாம். அரசியலில் கால் பதிக்க ஆசைப்பட்டு, அரசியல் கருத்துக்களை பகிரங்கமாகக் கூறிய ரஜினிகாந்த், அரசியலில் கால் பதித்து தேர்தலை சந்தித்த கமல்ஹாசன் என ஜெயலலிதா மற்றும் கருணாநிதி மறைவுக்குப் பின்னர் அரசியல் களம் சூடுபிடித்தது.

இந்த இருபெரும் தலைவர்கள் இருந்தபோதே விஜயகாந்த் அரசியலில் களம் கண்டு பின்னர் 2011 தேர்தலில் அ.தி.மு.க. வுடன் கூட்டணி அமைத்து எதிர்க்கட்சியான போதிலும், விஜய் போல பெரிய வெற்றியைப் பெறும் அளவுக்கு அவரது கட்சி எழுச்சி காணவில்லை.

தமிழ்நாடு அரசியலில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுக்கு பின்னர் மற்றொரு சினிமா நட்சத்திரத்தால் எழுச்சி காண முடியவில்லை. இந்த நிலையில் 2026 தேர்தலில் விஜய் ஆட்சியமைப்பதற்கு தேவையான தனிப்பெரும்பான்மை பெறாத போதிலும், தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளார்.

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக பல ஆண்டுகள் இருந்த ரஜினிகாந்தின் அரசியல் வருகை குறித்த விவாதங்கள் 1990களின் மத்தியில் தொடங்கியது. 1996ஆம் ஆண்டு தேர்தலின்போதுதான் முதன் முறையாக "ரஜினி வொய்ஸ்" என்ற



வார்த்தை தமிழ்நாடு அரசியலில் பேசு பொருளானது.

தனது திரைவாழ்வின் உச்சத்தில் இருந்த ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு அப்போதிருந்து ரசிகர்கள் மத்தியில் எழுந்த போதிலும், 20 ஆண்டுகளுக்கு மேலாக ரஜினிகாந்த் முழுநேர அரசியலுக்கு வரவில்லை. ஆனால் திரைப்படங்களில் மறைமுகமான அரசியல் வசனங்கள் எப்போதுமே தொடர்ந்தது.

இறுதியாக 2017ஆம் ஆண்டு அரசியலுக்கு வருவதாக அறிவித்தார் ரஜினிகாந்த். ஆனால் இதிலிருந்து 3 ஆண்டுகளில் கொரோனா பெருந்தொற்று பரவியநிலையில் அரசியலில் தான் ஈடுபடப்போவதில்லை என அறிவித்தார். இத்துடன் ரஜினியின் அரசியல் வாழ்க்கை முழுவீச்சில் தொடங்கும் முன்பே முடிந்து போனது.

கமல்ஹாசன் 2018ஆம் ஆண்டு அரசியலில் களமிறங்கினார். ஜெயலலிதா மறைவு மற்றும் கருணாநிதி உடல்நலக்குறைவால் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த சூழலில், மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை அவர் தொடங்கினார்.

இவரது கட்சி 2019 மற்றும் 2021 தேர்தல்களில் குறிப்பிடத்தக்க வெற்றி ஏதும் பெறவில்லை. 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் சுமார் 3.7 வீத வாக்குகளை இவரது கட்சி பெற்ற நிலையில், 2024 மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

பின்னர் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டார் கமல்ஹாசன். 2026 சட்டப்பேரவை தேர்தலிலும் இவரது மக்கள் நீதி மய்யம் தேர்தலில் களமிறங்காத நிலையில், தி.மு.கவை ஆதரித்தது.

ரஜினிகாந்த் அரசியலுக்கே வராமல் விலகிவிட்ட நிலையில், கமல்ஹாசன் அரசியலுக்கு வந்த பின்னர் பெரிய மாற்றம் ஏதும் நிகழ்த்தவில்லை.

சரியான நேரத்தை பயன்படுத்தியதன் விளைவாக தேர்தலில் விஜய் தாக்கம் ஏற்படுத்தியுள்ளார் என கூறும் பேராசிரியர் ராமு மணிவண்ணன், சினிமா மூலம் கிடைத்த புகழ் வெளிச்சத்திலிருந்து தலைவராக அவர் உருவாகியிருக்கிறார் என்கிறார்.

ஜனரஞ்சகமான தலைவராக உருவெடுப்பது என்பது, விஜய்க்கு இன்னும் நிகழவேண்டும் என குறிப்பிடும் அவர், மக்களின் உணர்வு சார்ந்த தலைவராக அவர் உருவெடுப்பது அவருடைய எதிர்கால அரசியல் செயல்பாடுகளைச் சார்ந்தே இருக்கிறது என்று கூறுகிறார்.

அரசு நிர்வாகத்தில் கவனம் செலுத்துவது, கட்சியை அமைப்பாக கொண்டு செல்வது ஆகிய வற்றை பொறுத்தே விஜயின் எதிர்காலம் அமையும் என அவர் கூறுகிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழகத்தின்...

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இந்த விழாவுக்கான பிரம்மாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (அ)

## செம்மணி புதைகுழி...

தொகுதி உட்பட 2 என்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியில், 255 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 249 மனித என்புக்கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை புதைகுழிக்குள் காணப்பட்ட சந்தேகத்திற்கு இடமான கறுப்பு நிற மண்ணுக்குள் இருந்து எரிந்த நிலையில் சில என்புகளும், நாணயக் குற்றிகளும் சான்று பொருள்களாக மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் மூக்குத்தி போன்ற உடைந்த நிலையில், சிறிய தங்க ஆபாரணம் ஒன்றும், காப்பு போன்ற ஆபரணம் ஒன்றும், மரப்பெட்டி ஒன்றின் சிதைவுகள், ஆணிகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும், குழந்தையின் என்புக்கூட்டு தொகுதி நேரடியாக மண்ணில் இருந்து அகழ்ந்து எடுக்கமுடியாத நிலைமை காணப்பட்டமையால், அதனை பன்டேஜ் துணிகளால் சுற்றி பக்குவப்படுத்தி மண்ணுடன் அகழ்ந்து எடுக்கப்பட்டதாக சட்டத்தரணி ஞா.ரனித்தா தெரிவித்துள்ளார். (அ)

## நீதித்துறையின்...

நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு இடையிலான தடைகள் மற்றும் சமன்பாடு சரியாகப் பேணப்படுவதன் மூலம் ஜனநாயகத்தை பலப்படுத்த முடியும்.

இருப்பினும், நாட்டின் ஜனாதிபதி தற்போது நீதித்துறை செயற்பாடுகள் குறித்து எதிர்வுகூறல்களை முன்வைப்பதன் மூலமும், நீதித்துறையின் செயற்பாடுகள் குறித்து ஒரு பிரதான ஊடகப் பேச்சாளராகவும், வர்ணனையாளராகவும் செய்திகளை உருவாக்குபவராகவும் செயற்பட்டு வருகிறார். இது நீதித்துறையை அவமதிப்பதோடு, ஜனநாயகச் செயல்முறையை மீறி நீதித்துறையின் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இது ஜனநாயகத்திற்கும் நீதித்துறையின் சுயாதீனத்துக்கும் விடுக்கப்படும் பெரும் அடியாகும்.

ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடானது நாட்டின் அரசியல் சுதந்திரம், ஜனநாயக உரிமை, நீதித்துறைச் செயல்முறை மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகும். எனவே, மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையை உடனடியாக நிறுத்தி, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, சிரேஷ்ட பிரஜைகளினது சேமிப்புகளுக்கான வட்டியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதித்துறையில் தலையிடாமல் அதை வலுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். பல நீதிபதிகள் தங்களது பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்களுக்காகக் காத்திருக்கும் சூழலில், அரசாங்கம் அந்த நியமனங்களைக் கூட வழங்கவில்லை. நீதித்துறையை வலுப்படுத்தி ஜனநாயகத்தின் தூண்களான மூன்று அதிகார மையங்களின் அதிகாரங்களைப் பாதுகாப்பதும், இவற்றுக்கிடையிலான தடைகள் மற்றும் சமனபாடுகளையும் பாதுகாப்பதை விடுத்து, நீதித்துறை செயற்பாடுகள் குறித்து எதிர்வுகூறுபவராக ஜனாதிபதி செயற்படக் கூடாது.

அரசாங்கம் மக்களுடன் செய்து கொண்ட சமூக ஒப்பந்தை மீறினால் நாம் மக்களுக்காக வீதிக்கு இறங்குவோம்.

அவ்வாறே, நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை வலுப்படுத்தி, அவர்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதோடு, ஒரு சிறந்த வாழ்க்கைத்தரத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இது ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் சமூக உடன்படிக்கையாக அமைந்து காணப்படுகின்றது. இந்த உடன்படிக்கையை மீற வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார். (அ)

## தாக்கப்பட்ட யாழ்...

தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்துள்ள குறித்த கடற்றொழிலாளர் தற்போது இந்தியாவின் சென்னையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினர் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளனர். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை.

இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சு உடனடியாகத் தலையிட்டு, தூதரக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு கடற்றொழிலாளர் பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு நாமல் ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## கோப்பாய்...

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்தவேளை குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது கரவெட்டி வடக்கைச் சேர்ந்த 22 வயதான சிவதாசன் துசிந்தன் மற்றும் 24 வயதான ஏழுமலை துசாந்தன் ஆகிய இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இருவரதும் சடலமும் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## தமிழக வெற்றி...

தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உங்கள் அனைவரின் ஒவ்வொரு வாக்கையும் விலைமதிப்பற்ற நம்பிக்கையாக கருதுகிறேன்.

இப்போது வரை கிடைத்துள்ள புள்ளிவிவரங்களின்படி தி.மு.க. கூட்டணிக்கு 1 கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகள் கிடைத்துள்ளன. இம்மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதல் தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியானது, நம்மை விட 17.43 இலட்சம் வாக்குகளை மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது. நமக்கும் அவர்களுக்குமான வாக்கு வீத வேறுபாடு என்பது 3.52 வீதம் மட்டுமே. என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை வலிமையானதாகவே கருதுகிறேன்.

நமக்கு வாக்களித்த மக்களுக்கு நேரடியாகச் சென்று நன்றி தெரிவிக்கும் கடமையை நாம் எப்போதும் செய்து வருகிறோம். அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவரும், உடனடியாக வாக்களித்த மக்களைச் சந்தித்து நன்றி தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களாட்சியில் மக்களே நம் வணக்கத்துக்குரியவர்கள். அவர்களுக்காகவே நாம் கட்சி நடத்துகிறோம். அவர்களுக்காகவே நாம் அரசியலில் இயங்குகிறோம். எனவே, அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிக்க நேரில் செல்லுமாறு அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆறு முறை ஆட்சியில் இருந்துள்ளது. நாம் பார்க்காத வெற்றியும் இல்லை நாம் சந்திக்காத தோல்வியும் இல்லை. அரசியல் பொதுவாழ்வில் கொள்கையைக் காக்கும் பயணத்தில் நமது கொள்கை தோல்வி அடைந்துவிடக்கூடாது என்பதில்தான் நாம் எப்போதும் கவனமாக இருப்போம்.

வெற்றியாக இருந்தாலும், தோல்வியாக இருந்தாலும் அதனைச் சமமாகக் கருதி தனது இலட்சியப் பயணத்தை நடத்துபவர்கள்தான் கழக உடன்பிறப்புகள். அதனால்தான் முக்கியமான மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பேசும்போதெல்லாம், தமிழ்நாடு முழுமைக்குமான தொண்டர்கள் அனைவருக்கும் வணக்கம் வைத்து விட்டுத்தான் நான் தொடங்குவேன். இயக்கத்தின் இரத்த நாளங்கள், வேர்கள் நீங்கள்தான்.

எனக்கு ஆறுதல் சொல்லி பலரும் குறுஞ்செய்தி அனுப்பி வைத்து வருகிறீர்கள். உங்களால் உருவாக்கப்பட்ட எனக்கு, உங்களது வலிமையால் வலிமை பெற்ற எனக்கு நீங்கள் உடனிருக்கும் வரை என்ன கவலை? நாம் அனைவரும் தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள். அந்த உணர்வோடு தொடர்ந்து நாம் பயணிப்போம்.

உங்கள் உழைப்பால் விளைந்த அறுவடைதான் 1.54 கோடி வாக்குகள். உங்கள் உழைப்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? தலைமைத் தொண்டன் என்ற உணர்வோடு நாம் தொடர்ந்து பயணிப்போம்.

ஆளும் கட்சியாக இருந்தால் மக்களுக்கான திட்டங்களைத் தீட்டுவோம். எதிர்க்கட்சியாக இருந்தால் மக்களுக்கான கோரிக்கைகளுக்காகவே போராடுவோம். அந்த வகையில் இப்போது வலிமையான எதிர்க்கட்சியாக இருந்து மக்களுக்கான அரசியலை நாம் தொடர்வோம் - என குறிப்பிட்டுள்ளார். (அ)

## மேலதிக நிதி...

உற்பத்தி தடைப்பட்டதையும், அதனால் ஏற்பட்ட மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அதிக விலையில் திரவ எரிபொருளைப் பயன்படுத்தவேண்டியிருந்ததையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இதனால் மின்சார சபைக்கு ஏற்பட்ட மேலதிகச் செலவுகளை ஈடுகட்ட மின்சாரக் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக,

தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்டும் சுமை மின் நுகர்வோர் மீது சுமத்தப்படமாட்டாது. இதற்கான நிதியைக் திரட்டுவது குறித்து உரிய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் மீது மேலதிக பாரத்தை ஏற்றாமல் இந்த நிதிப் பிரச்னையைத் தீர்க்க அரசாங்கம் முயன்று வருகிறது-என்றார். (அ)

## வடக்கு - கிழக்கில்...

வெள்ளிக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

2025/2026 வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்தின் பின் வட இந்து சமுத்திரப் பகுதியில் தோற்றம் பெறுகின்ற முதலாவது தாழமுக்கம் என்ற வகையில் வானிலை அடிப்படையில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

ஏற்கனவே வெப்பச் சலனம் காரணமாக கணிசமான அளவு மழைவீழ்ச்சி கிடைத்த பிரதேசங்களில் இந்த தாழமுக்கம் காரணமாகவும் மழை கனமழை கிடைத்தால் சில அசௌகரியங்கள் ஏற்படக்கூடும் என்பதால் மக்கள் இது தொடர்பாக கரிசனை கொள்வது சிறந்தது.

இதனால் எதிர்வரும் 09.05.2026 முதல் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றவர்கள் அவதானமாக இருப்பதோடு, கரையோர மீன்பிடியில் ஈடுபடுபவர்களும் இது தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம்-என்றார். (அ)

## த.வெ.க ஆட்சியமைக்க...

பெற்றிருப்பதால், அதில் திருச்சி கிழக்கு தொகுதியை அவர் ராஜினாமா செய்வார் என தெரிகிறது.

மேலும், பெரும்பான்மை வாக்கெடுப்பை நடத்த த.வெ.க.வில் இருந்து ஒருவர் தற்காலிக சபாநாயகராக இருக்க நேரிடும் என்பதால், அவரால் வாக்களிக்க முடியாது. எனவே, த.வெ.க. ஆட்சியமைக்க இன்னும் 12 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அந்த வகையில், த.வெ.க.வுக்கு 4 வழிகள் இருக்கின்றன.

முதல் வழியாக, த.வெ.க.வுக்கு காங்கிரஸ் (5 தொகுதிகள்), பா.ம.க. (5), இந்திய கம்யூனிஸ்ட் அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அல்லது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளில் ஒன்று (2) ஆதரவு அளிக்க வேண்டும்.

2ஆவது வழியாக, த.வெ.க.வுக்கு பா.ம.க. (5), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (1) ஆதரவு அளிக்க வேண்டும்.

3 ஆவது வழியாக, த.வெ.க.வுக்கு காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (1) ஆதரவு அளிக்க வேண்டும்.

4 ஆவது வழியாக, த.வெ.க.வுக்கு அ.தி.மு.க. (45) ஆதரவு அளிக்கவேண்டும். ஆனால், அ.தி.மு.க. ஆதரவு அளிக்க வேண்டும் என்றால், துணை முதலமைச்சர், முக்கிய துறைகளின் அமைச்சர் பதவிகளை குறிவைக்கும். இவ்வாறு 4 வழிகள் இருந்தாலும், த.வெ.க. தலைவர் விஜய் எடுக்கப்போவது தான் இறுதி முடிவாக இருக்கும். (அ)

## அரச வைத்தியசாலை...

பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்த பின்னரே இந்த விஜயம் இடம்பெற்றது.

தேசிய வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்துப் பிரிவு ஆகியவற்றை நேரில் பார்வையிட்ட ரஷ்யக் குழுவினர், அங்கு பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிகிச்சையளிக்கும் முறைகள் குறித்துக் கேட்டறிந்தனர். வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களுடன் தொழில்நுட்ப ரீதியான கலந்துரையாடல்களிலும் அக்குழுவினர் ஈடுபட்டனர்.

இலங்கையின் இலவச சுகாதார சேவை மிகவும் சிறப்பானது எனப் பாராட்டிய அமைச்சர் மிஹைல் முராஷ்கோ, இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் அறிவுப் பகிர்வையும் இத்தகைய விஜயங்கள் மேலும் பலப்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

அரச வைத்தியசாலை கட்டமைப்பை நவீன உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்ப வசதிகளுடன் வலுப்படுத்துவது குறித்து ரஷ்ய குடியரசு விசேட அவதானம் செலுத்தியுள்ளதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# தமிழகத்துக்குக் கச்சதீவு மட்டுமல்ல யாழ்ப்பாணத்தையுமே கொடுங்கள்!

## பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பி.

கொழும்பு, மே. 06

"கச்சதீவு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தையும் தமிழகத்துக்கு கொடுங்கள். அவர்கள் எங்களைப் பாதுகாத்து கொள்வார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

எமது இதயத்தை கவர்ந்த தமிழ்நாட்டு முதல்வராகவுள்ள விஜய்க்கு அடக்கப்பட்ட தமிழன் என்ற ரீதியில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்த அர்ச்சுனா எம்.பி., தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தீவுப் பகுதிகளில் மின்சாரம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்தார்.

விஜய் கச்சதீவை கேட்டதற்கு ஜனாதிபதி வழங்க முடியாது எனக் கூறியுள்ளார். ஆனால் கச்சதீவு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தையும் தமிழகத்துக்கு கொடுக்க வேண்டும். தமிழக மக்கள் எங்களை பாதுகாத்துக்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## 2 குழந்தைகள் உட்பட 12 பேர் இவ்வருடம் டெங்கினால் பலி!

கொழும்பு, மே. 06

நடப்பாண்டில் இதுவரை இரண்டு குழந்தைகள் உட்பட 12 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சமூக மருத்துவர் பிரஷிலா சமரவீர, உயிரிழந்த இரண்டு குழந்தைகளும் கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்தார்.

நாடு முழுவதும் நடப்பாண்டில் இதுவரை 25,846 டெங்கு நோய்த் தொற்றுகள் பதிவாகியுள்ளன.

மழை மற்றும் நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்குச் சாதகமான சுற்றுச்சூழல் நிலவுவதே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## 2027 முதல் பரீட்சைகள் விடுமுறைகள் மாற்றம்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே. 06

இலங்கையின் பாடசாலைத் தவணைகள் மற்றும் பொதுப் பரீட்சை கால அட்டவணையை, 2020 ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைக்கு அடுத்த ஆண்டு (2027) முதல் முழுமையாகக் கொண்டுவர கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ முக்கிய தகவல்களைப் பகிர்ந்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கல்வி முறைமை தொடர்ச்சியான தடைகளை எதிர்கொண்டு வந்தது.

கொவிட் 19 பெருந்தொற்று, நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் சீரற்ற வானிலை போன்ற காரணங்களால் பாடசாலை நாட்காட்டி பாரியளவில் மாற்றமடைந்தது.

இந்தச் சீர்குலைவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், 2027 ஆம் ஆண்டு முதல் பாடசாலைத் தவணைகள் மற்றும் பொதுப் பரீட்சைகள் அனைத்தும் அவற்றின் வழக்கமான கால அட்டவணையின்படி நடைபெறும் என்று செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார். பழைய அட்டவணைக்கு மாறுவதற்கான ஒரு நிலை மாற்றக் காலமாக நடப்பு 2026 ஆம் ஆண்டில் சில மாற்றங் கள் செய்யப்பட்டுள்ளன.

2027ஆம் ஆண்டு ஜனவரியில் புதிய கல்வியாண்டைத் தொடங்குவதற்கு ஏதுவாக, இந்த ஆண்டு (2026) எஞ்சியுள்ள இரண்டு பாடசாலை விடுமுறை காலங்களும் வழக்கத்தை விட நீண்ட நாள்களுக்கு வழங்கப்படும்.

2026 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் எவ்வித மாற்றமும் இன்றி திட்டமிட்டபடி டிசெம்பர் மாதம் நடைபெறும்.

இலங்கையின் கல்வி முறைமை கடந்த சில ஆண்டுகளாக கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 2020 முதல் பரவிய கொவிட் 19 மற்றும் அதன் பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து சிரமங்கள் போன்றவற்றால் பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்டன.

பாடசாலைத் தவணைகள் மாற்றமடைந்ததால், பொதுப் பரீட்சைகள் பலமுறை ஒத்திவைக்கப்பட்டு மாணவர்களின் உயர்கல்வித் திட்டமிடல் பாதிக்கப்பட்டது.

சமீபத்தில் ஏற்பட்ட டிட்வா சூறாவளி உள்ளிட்ட மோசமான வானிலை பாதிப்புகளும் நாட்டின் பல பகுதிகளில் கல்வி நடவடிக்கைகளைத் தற்காலிகமாக முடக்கின.

இந்தச் சவால்களைக் கடந்து, கல்வி முறையைச் சீரமைப்பதன் மூலம் மாணவர்களின் கல்வி எதிர்காலத்தை மீண்டும் ஒரு நிலையான பாதைக்குக் கொண்டு வர முடியும் என கல்வி அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (அ)

## வான் விபத்தில் 13 மாணவர் காயம்!

கொழும்பு, மே. 06

நாவலப்பிட்டி, கெட்டபுலாவிலிருந்து ஹரங்கல நோக்கி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் 13 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று காலை 7.00 மணியளவில், நாவலப்பிட்டி-திஸ்பனே சந்திப் பகுதியில் குறித்த வான் பயணித்துக்கொண்டிருந்த போது, திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 13 மாணவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு, நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் வானின் சாரதியும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## மதுபானம் நுகர்வு நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மே. 06

இலங்கையில் மதுபான நுகர்வு அதிகரித்து வருவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான தரவுகளின்படி, உள்நாட்டு பியர் உற்பத்தி 5 வீதமும், மதுபான உற்பத்தி 17 வீதமும் அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் மதுபானங்களின் விலைகளில் பெரிய மாற்றம் இல்லாதது நுகர்வு அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

பணவீக்கம் இருந்தபோதிலும், மக்களின் வாங்கும் திறன் அதிகரித்திருப்பது இதற்கான தேவையை உயர்த்தியுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வரி உயர்வுகள் விற்பனை அளவைக் குறைத்திருந்த நிலையில், தற்போது கலால் வரி வருமானம் அதிகரித்துள்ளதாக அந்த மையம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஐ.நா. அமைதி காக்கும் படைக்கு இலங்கையில் இருந்து 1000 பேர்!

### பாதுகாப்புச் செயலாளர் தகவல்

கொழும்பு, மே. 06

இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 1000 பேர் வரை ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைப் பிரிவில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹெய்ட்டி நாட்டில் பணியாற்றுவதற்காக இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை இணைத்துக் கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதற்கமைய, அந்தப் பணிகள் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படும்.

போதைப்பொருள் கடத்தல் சில செல்வாக்கு படைத்த நபர்களின் ஆசியுடன் நீண்ட காலமாக தடையின்றி முன்னெடுக்கப்பட்டு வந்தது. இனி அவ்வாறானவை இடம்பெற வாய்ப்பு இல்லை. முறையாக அவை கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாங்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் போதைப்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுக்களைக் கைது செய்து வருகிறோம்.

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்கும் பாதாள உலகக் குழுவினர் கைது செய்யப்பட்ட பின்னர் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவது அனைவருக்கும் தெரியும்.

இந்தக் கைது நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இதன் பின்னணியில் உள்ள அனைவரும் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார். (அ)

### முன்னாள் தவிசாளர் ஜெபநேசனின் முயற்சி

## இயற்கை உர உற்பத்தியில் மானிப்பாய் சபை வெற்றி!

யாழ்ப்பாணம், மே. 06

மானிப்பாய் பிரதேச சபையானது இயற்கை உர உற்பத்தியில் வெற்றியை கண்டுள்ளது. பிரதேச சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை பயன்படுத்தி இந்த உரமானது தயாரிக்கப்ப டுகிறது. மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் தவிசா ளராக இருந்த அந்தோனிப்பிள்ளை ஜெபநேசனின் தூர நோக்கான சிந்தனையூடாகவே இந்த இயற்கை உர உற்பத்தியானது கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு திறம்பட நடைபெற்று வந்தது.

இந்நிலையில் அந்த வேலைத்திட்டமானது தற்போது வெற்றியை கண்டுள்ளது. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு விவசாய செயற்பாட்டுக்கு 3 இலட்சம் கிலோ இயற்கை உரமானது தேவைப்படும் பட்சத்தில் அதனை வழங்குவ தற்கு மானிப்பாய் பிரதேச சபை முன்வந்துள்ளது. அதன் முதற்கட்டமாக தற்போது 50ஆயிரம் கிலோ எடையுடைய உரத்தை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்த மாதம் 15 முதல் வெப்பநிலை தணியும்

கொழும்பு, மே. 06

நாட்டில் கடந்த சில வாரங்களாக நிலவி வரும் கடும் வெப்பம் மற்றும் புழுக்கமான வானிலை, இம்மாதம் 15 ஆம் திகதி முதல் முடிவுக்கு வரும் என வளிமண்டலவியல் திணைக் களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க-

நாட்டில் மக்கள் அனுபவித்து வரும் கடும் வெப்பமான காலநிலை மே 15 ஆம் திகதியுடன் நிறைவடையும் என எதிர்பார்க்கிறோம். அதே காலப்பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைய ஆரம்பிக்கும். இதனால் மே மாதம் 15ஆம் திகதி முதல் நாடாளவிய ரீதியில் குளிர்ச்சியான வானிலை நிலவும்.

தற்போது ஆங்காங்கே பெய்து வரும் மாலை நேர மழை, மே 8 ஆம் திகதி முதல் மேலும் அதிகரிக்கக்கூடும். மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது-என்றார். (அ)

## கபில சந்திரசேனவுக்கு பிணை

கொழும்பு, மே. 06

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் விமானங்களை கொள்வனவு செய்யும்போது, 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அந்த நிறுவனத்தின் முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவை பிணையில் செல்ல அனுமதித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ்.போதரகமவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, சந்தேகநபரை 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 100 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் நீதவான் தடை விதித்துள்ளார்.

இந்த வழக்கு கடந்த 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேக நபரான கபில சந்திரசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்னவினால் இந்த பிணை கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்தப் பிணைக் கோரிக்கைக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சார்பில் ஆஜரான அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதவான், பிணைக் கோரிக்கை தொடர்பான உத்தரவை நேற்று அறிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media